24th October 1964]

புலவர் கா. கோவிந்தன்: கருப்புக்கொடி காட்டிய நடவடிக்கைகளால் எங்காவது பாதகம் ஏற்பட்ட கூட்டங்களைப் பற்றி குறிப்பிட்டு எடுத்துக்காட்ட முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் அதைத் தான் சொன்னேன். திருவல்லிக்கேணியில் நடந்த கூட்டத்தில் கூட்டத்திற்கு எதிரே ஒலிபெருக்கி வைத்துக்கொண்டு கோஷம் போட்டு சம்பந்தம் இல்லாதவர்கள் செய்திருக்கிறார்கள். நானும் சில பெண் அங்கத்தினர்களும் பேசிக்கொண்டிருந்தபோது எதிரிலே போட்ட கோஷம் இந்தக் கூட்டத்திற்கே பாதகமாகி அமைதியின்மையை விளைவித்தது என்று சொன்னேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் முதல் அமைச்சர் அவர்கள் கூறியதிலிருந்து அரசாங்கத்தின் கொள்கையில் ஒரு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்று தோன்றுகிறது. இனி இங்கே யாருக்கும் எதிராக கருப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தை அனுமதிக்கக் கூடாது என்பது தான் அரசாங்கத்தின் கொள்கையா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதில் கொள்கை ஒன்றும் இல்லை.

திரு. மு. கருணாநிதி: முதல் அமைச்சரை திரு. ம.பொ.சி. சந்தித்த போது குறிப்பிட்ட இடத்திலிருந்து கருப்புக்கொடி காட்டுவதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்கவில்லை என்று சொன்னார்கள். கேட்டால் அனுமதி அளிக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதைப் பற்றியெல்லாம் திரு. ம.பொ.சி. அவர்கள் பேசினார்கள். அவர்கள் சில கருத்துக்களைக் கூறினார்கள். நானும் அவர்களுக்கு விளக்கிச் சொன்னேன். மேலும் ஏதாவது கருத்துத் தெரிவித்தால் அதைப்பற்றிக் கவனிக்கலாம்.

தோல் பதனிடும் சாலை (ராணிப்பேட்டை முதலிய ஊர்கள்)

* 3 கு.கா. கேள்வி.—**திரு. சா. கணேசன்:**
திரு. மு. பொ. வடிவேல்: } கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ராணிப்பேட்டை, பேரணம்பட்டு, வாணியம்பாடி முதலிய ஊர்களில் உள்ள தோல் பதனிடும் சாலை நிர்வாகிகள் எவ்வித அறிவிப்புமின்றி ஊறல் வேலைகளை நிறுத்தி விட்டதால் சுமார் 6,000 ஹரிஜனங்கள் வேலையற்று அவதிக்குள்ளான செய்தி அரசாங்கத்திற்கு வந்ததா?

(இ) அத்தகைய நிலை ஏற்பட்டதற்குக் காரணம் என்ன?

(உ) அதன்மீது தொழிலாளர் நலத்துறை அதிகாரி ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொண்டாரா?

(எ) இந்த நிலை மாறி மீண்டும் சுமுகமாகத் தொழில் நடை பெறவும் தொழிலாளர் துயர் அகலவும் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது அல்லது எடுத்துக் கொள்ளப் போகிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) On account of the strained relations between the management and the workers.

(*c*) Yes.

(*d*) Interim settlement under section 12 (3) of the Industrial Disputes Act, 1947 has been effected between the two parties by the Labour Officer, Vellore, on 19th October 1964 and work has been resumed on 20th October 1964.

திரு. பி. கே. மூக்கையா தேவர்: *அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது 'ஸ்ட்ரைன்டு ரிலேஷன்ஷிப்' என்று சொன்னார்கள். இதனுடைய முழு விவரம் என்ன ?*

கனம் திரு. எம். பக்தவத்சலம்: *வேலை வாங்குகிற தொழில் அதிபர்கள், வேலை செய்கின்ற தொழிலாளர்கள் இவர்களிடையே நல்லுறவு எப்பொழுதும் இருக்கவேண்டும். சில சமயங்களில் இந்த உறவு கெட்டுப் போகிறது. அது தான் 'ஸ்ட்ரைன்டு ரிலேஷன்'.*

திரு. மீ. கலியாணசுந்தரம்: *கனம் முதல் அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலிருந்து கேள்வி கேட்கவேண்டியிருக்கிறது. அவர் 'ஸ்ட்ரைன்டு ரிலேஷன்ஸ்' என்ற வார்த்தைகளை உபயோகப்படுத்தினார்கள். முதலில் சாதாரணமாக அதிகாரிகள் எழுதிவைத்திருக்கிறார்கள் என்று விட்டுவிட்டேன். அவர்கள் கேட்ட கோரிக்கை போனஸ் கோரிக்கை. போனஸ் வேண்டும் என்று அவர்கள் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். நோட்டீஸ் கொடுத்ததும் முதலாளி தோல் நனைப்பதை மூடிவிட்டார்கள். இது தான் நடந்தது. கோரிக்கைகளை வைத்து சமாசம் செய்து கொள்ள வசதி இருக்கும்பொழுது, உறவு கெட்டுவிட்டது என்று சொல்லுவது சரியா ?*

கனம் திரு. எம். பக்தவத்சலம்: *அவர்கள் நியாயமான கோரிக்கைகள் கேட்டால் கூட, அதைத் தொழில் அதிபர்கள் கொடுக்க அனுமதிக்காவிட்டால் அது தான் 'ஸ்ட்ரைண்டு ரிலேஷன்ஸ்'. அதில் ஒன்றும் தவறுதல் இல்லை. நான் ஒன்றும் தவறுதலாகச் சொல்லவில்லை.*

விடுமுறை விடுதிகள்

***80 கேள்வி.—திரு. ம. கமலநாதன்:** *கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதில் அளிப்பாரா—*

சென்னைக் கடற்கரையிலும், மகாபலிபுரத்திலும் விடுமுறை கழிக்கும் விடுதிகள் (Holiday huts) கட்டும் திட்டம் உண்டா?

கனம் திரு. கோ. பூவராகன் : *ஆம், ஐயா.*